**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 507** **நாள் : 24.09.2026**

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு கல்லூரிகள், அரசு சாரா கல்லூரிகள், உயர்கல்வி நிறுவனங்களில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கல்லூரி முதல்வர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு கல்லூரிகள், அரசு சாரா கல்லூரிகள், உயர் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக 112 கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பிரதிநிதிகளுடனான ஆய்வுக்கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காணொலிக் காட்சி வாயிலாக இன்று (24.09.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ், இ.ஆ.ப., மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் (பொ) டாக்டர் ஜெயலட்சுமி, பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள், கூடுதல் மாநகர நல அலுவலர்கள், மண்டல நல அலுவலர்கள், மண்டல மருத்துவ அலுவலர்கள், தலைமை பூச்சித் தடுப்பு அலுவலர், 112 கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கல்லூரி வளாகங்களில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பிற்காக கடைப்பிடிக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் மாநகராட்சி மூலம் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் பிரதிநிதிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், டெங்கு காய்ச்சல் பரவும் விதம், டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் குறித்த விவரங்கள், கல்லூரி வளாகத்தில் தேவையற்ற பொருட்களை வாரந்தோறும் அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ளுதல், மாணவர்களின் விடுப்பு குறித்து அறிந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல், நோய்த் தாக்கம் ஏற்பட்ட மாணவர்களை தொடர் கண்காணிப்பில் வைத்து, சிகிச்சை அளித்தல், டெங்கு காய்ச்சல் குறித்த தகவல்களை மாநகராட்சிக்கு உடனடியாக தெரிவித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து காணொலிக் காட்சி வாயிலாக விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

**இக்கூட்டத்தில் கல்வி நிறுவனங்களில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மாநகராட்சி ஒத்துழைப்புடன் தீவிரமாக மேற்கொள்ள மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.**

டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கீழ்காணும் அறிவுரைகள் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

**கல்வி நிறுவனங்களில் டெங்கு தடுப்பு (முக்கியத்துவம்)**

- ❖ சென்னையில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது.
- ❖ டெங்குவை பரப்பும் 'ஏடிஸ்' (Aedes) கொசுக்கள் முக்கியமாக பகல் நேரங்களில்தான் கடிக்கின்றன. ஆகவே, கல்வி நிறுவனங்கள் டெங்குவைப் பரப்பு கொசுக்களை உருவாகுவதைத் தடுக்கின்ற வகையில் தேவையற்றப் பொருட்களை அகற்றி, தண்ணீர் தேக்கமின்றி சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திட வேண்டும்.

**டெங்கு காய்ச்சலுக்கான முக்கிய அறிகுறிகள் (Symptoms):**

- ❖ அதிக காய்ச்சல் (High Fever)
- ❖ தோலில் தடிப்புகள்/சிவப்பு புள்ளிகள் (Rash)
- ❖ கண்களுக்கு பின்புறம் கடுமையான வலி (Intense Pain Behind Eyes)
- ❖ குமட்டல் அல்லது வாந்தி (Nausea or Vomiting)
- ❖ தசை, எலும்பு மற்றும் மூட்டு வலி (Muscle, Bone and Joint Pain)

**வெளிநோயாளியாக (Out Patient) சிகிச்சை பெற தகுதிகள்:**

- ❖ தேவையான அளவு திரவங்களை (Fluids) அருந்த முடிந்தால்.
- ❖ குறைந்தபட்சம் 6 மணி நேரத்திற்கு ஒரு முறையாவது சிறுநீர் கழித்தால்.
- ❖ எச்சரிக்கை அறிகுறிகள் இல்லாதபட்சத்தில்.

**ஆபத்தான எச்சரிக்கை அறிகுறிகள் (Warning Signs):**

- ❖ வயிறு வலி அல்லது அழுத்தினால் வலி ஏற்படுதல்
- ❖ தொடர்ச்சியான வாந்தி
- ❖ உடலில் நீர் தேங்குதல் (Fluid accumulation)
- ❖ சளிச்சவ்வு அல்லது மூக்கு/வாயில் ரத்தப்போக்கு
- ❖ சோர்வு, அமைதியின்மை
- ❖ கல்லீரல் வீக்கம் (>2 செ.மீ)
- ❖ ஆய்வகப் பரிசோதனையில் பிளேட்லெட் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து, HCT அளவுகள் அதிகரித்தல்

**முதன்மை உத்திகள் (Strategies):**

- ❖ முட்டை/லார்வா ஒழிப்பு (Anti-larval Measures): நீர் தேங்கும் மூலங்களை அழித்தல்.
- ❖ வளர்ந்த கொசுக்கள் ஒழிப்பு (Adult Control): புகை அடித்தல் (Fogging).
- ❖ விழிப்புணர்வு ஏற்படுத்துதல் (Awareness Generation).
- ❖ பரிசோதனை மற்றும் சிகிச்சை மேலாண்மை.
- ❖ நோயறிவிப்பு மற்றும் கண்காணிப்பு (Notification & Surveillance).

**கல்வி நிறுவனங்களில் கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள்:**

- பாத்திரங்கள், தூக்கி எறியப்பட்ட டயர்கள் மற்றும் பூச்சட்டிகளில் தேங்கும் நீர்
- அடைபட்ட கூரை வடிகால்கள் (Roof Gutters) மற்றும் பறவைகளுக்கான தண்ணீர் பாத்திரங்கள்
- நீர் சேமிப்பு தொட்டிகள் (திறந்த நிலையில் இருப்பது)
- தேங்காய் ஓடுகள், தார்பாய் சுருக்கங்கள் மற்றும் திறந்தவெளி சாக்கடைகள்
- தெர்மாகோல் பெட்டிகள், கட்டுமானப் பகுதிகள் மற்றும் இயந்திரங்கள்
- RO குடிநீர் சுத்திகரிப்பு பகுதிகள் மற்றும் ஏசி (AC) வெளியேற்றக் குழாய்கள்
- பயன்படுத்தப்படாத வாஷிங்/கழுவும் பகுதிகள் மற்றும் குப்பை கொட்டும் இடங்கள்

**மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் சுகாதார அறிவிப்புகள்**

**ஒரு மாணவருக்கு காய்ச்சல் ஏற்பட்டால்:**

- காய்ச்சலின் முதல் நாளிலேயே மருத்துவரை அணுக வேண்டும். சுய மருத்துவம் செய்ய வேண்டாம்.
- தினமும் அதிக அளவு திரவ உணவுகளை உட்கொள்ள வேண்டும்.
- முழுமையாக குணமடைந்தது வரை வகுப்புகளுக்குச் செல்வதையோ அல்லது கடினமான வேலைகளையோ தவிர்க்கவும்.
- தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க ஏதுவாக மண்டல அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.
- சொந்த ஊருக்குப் பயணம் செய்தால்: கண்காணிப்புத் தொடர சுகாதார அதிகாரிகளுக்கு முன்னறிவிப்பு செய்யவும்.
- மற்றவர்களுக்குப் பரவாமல் இருக்க கொசுவலை, ஜன்னல் வலை அல்லது கொசு விரட்டி கிரீம்களைப் பயன்படுத்தலாம்.

**நிறுவன நிர்வாகத்திற்கான பொறுப்புகள்:**

- சுகாதாரத் துறையுடன் ஒருங்கிணைக்க ஒரு ஒருங்கிணைப்பாளரை (Nodal Officer) நியமிக்க வேண்டும்.
- குடிநீர் & உணவகம் குடிநீர் ஆதாரங்களை மூடி வைக்க வேண்டும்; விடுதி உணவகங்களில் (Canteen) சுகாதாரம் பேணப்பட வேண்டும்.
- கல்லூரி வளாகத்தில் கொசுக்கள் உற்பத்தியினை முழுமையாகத் தடுத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து கல்வி நிறுவனங்களும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளை மாநகராட்சி சுகாதாரத் துறை உள்ளிட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி மாணவர்களின் நலனைக் காத்திட வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**